# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.139/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜானி ரஞ்சித் | Father's Name | : | ஜான் ஜேசுகனி |
| Village | : | கீழச்சீவல்பட்டி | Taluk | : | திருப்பத்தூர் |
| Calling | : | | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(A1 to A3, A5 are present. A4 absent. For A4 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழச்சீவல்பட்டி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2023 அன்று திருவாரூர் நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியிலிருந்தபோது காலை 6.00 மணியளவில் நான், உதவி ஆய்வாளர் தியாகராஜன், சிறப்பு உதவி ஆய்வாளர் நாகராஜன் ஆகியோர் ரோந்து பணியிலிருந்தபோது திருவாரூர் மடப்புரம் சுடுகாடு அருகே மொத்தம் 5 நபர்கள் நின்று

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.10 16:32:59 +0530

பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களை பார்த்தவுடன் தப்பிக்க முயற்சி செய்தார்கள். நாங்கள் சுற்றி வளைத்து 3 நபர்களை பிடித்தோம். ராம்பிரசாத், பிரபாகரன், நிஜாம் ஆகிய 3 நபர்கள்தான் அவர்கள். தற்போது நீதிமன்றத்தில் உள்ள 4 நபர்கள் மேற்படி 5 நபர்களில் இருந்தவர்கள் ஆவார்கள். அதில் ஒருவர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை. அந்த 3 நபர்களையும் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். அவர்களிடம் ஓடினவர்களை பற்றி விசாரித்தபோது ஒருவர் பெயர் கங்காதரன் மற்றொருவர் பெயர் தொப்பை விக்னேஷ் என சொன்னார்கள். அவர்கள் தீபாவளி நேரம் என்பதால் அவர்கள் ஏதாவது தவறு செய்வதற்கு வாய்ப்பு இருக்கு என விசாரித்தோம். அவர்கள் மீது ஏற்கனவே காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது என்பதை தெரிந்து கொண்டு அவர்களை முன்னெச்சரிக்கையாக கைது செய்தோம். அந்த 5 நபர்களில் 3 நபர்கள் காவல்துறை குற்ற சரித்திர பதிவேட்டில் உள்ள நபர்கள் ஆவார்கள். அவர்களிடமிருந்து ஆயுதங்கள் எதையும் கைப்பற்றவில்லை. காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து 3 நபர்கள் மீதும் மற்ற 2 நபர்கள் மீதும் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:33:07 +0530

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர், வழக்கு பதிவு செய்தது காவல் நிலையத்தின் ஆய்வாளர் என்றால் சரி. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக தனி நபர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரி. தனி நபர்கள் யாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் ஆய்வாளருக்குதான் தெரியும். எனக்கு தகவல் கொடுத்தது என்னுடைய காவல் ஆய்வாளர் என்றால் சரி. திருவாரூர் மடப்புரம் குரு தெட்சிணாமூர்த்தி மடத்திலிருந்து விளமல் கல்லு பாலம் வரை சுடுகாடுகள் உள்ளன என்றால் சரி. காவல் ஆய்வாளர் எனக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை எனவும் எதிரிகள் யாரும் தீபாவளிக்கு முன்பு அங்கு நின்று பேசிக் கொண்டிருக்கவில்லை எனவும் என்னுடைய காவல் ஆய்வாளர் அறிவுரையின் பெயரில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு. எதிரிகளை என் முன்னிலையில் கைது செய்ததாக சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் தவறு. எதிரிகளின் பெயரை என்னுடைய டைரியில் எழுதி வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதால் எதிரிகளை பார்த்தாலே அடையாளம் தெரியும். எனவே,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:33:15 +0530

எதிரிகள் பெயரை எழுதி வைக்க வேண்டும் என்ற நிலை இல்லை. எதிரிகளை எனக்கு தெரியும்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:33:21 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.139/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாகராஜன் | Father's Name | : | நடேசன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 59 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(A1 to A3, A5 are present. A4 absent. For A4 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போதும் திருவாரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2023 அன்று திருவாரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை 6.00 மணியளவில் நான், உதவி ஆய்வாளர் தியாகராஜன், முதல் நிலை காவலர் ஜானி ரஞ்சித் ஆகியோர் ரோந்து பணியிலிருந்தபோது திருவாரூர் மடப்புரம் சுடுகாடு அருகே மொத்தம் 5 நபர்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:33:27 +0530

நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களை பார்த்தவுடன் தப்பிக்க முயற்சி செய்தார்கள். நாங்கள் சுற்றி வளைத்து 3 நபர்களை பிடித்தோம். ராம்பிரசாத், பிரபாகரன், நிஜாம் ஆகிய 3 நபர்கள்தான் அவர்கள். 5 நபர்களில் இருவர் ஆற்றில் குதித்து ஓடிவிட்டார்கள். பிடிபட்ட நபர்களை விசாரித்தபோது ராம்பிரசாத் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்களிடமிருந்து காலை 6.15 மணிக்கு அந்த வழியாக வந்த வள்ளல், ரவிச்சந்திரன் ஆகியோரை சாட்சியாக வைத்து இரும்பு கம்பி, மரக் கட்டை, 5 குல்லா ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினோம். எதிரிகள் மற்றும் தடய பொருள்களுடன் நிலையம் வந்து முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது. அவர்களை விசாரித்த வகையில் அவர்களுக்கு தீபாவளி செலவிற்கு பணம் இல்லை எனவும் மது அருந்துவதற்கு பணம் இல்லை எனவும் மகிழ்ச்சியாக இருப்பதற்காகவும் அந்த வழியாக தனியாக வரும் நபர்களிடம் ஆள் மாறாட்டமாக இருந்து அடித்து பிடுங்கலாம் என்ற நோக்கத்தில் இருந்ததாக சொன்னார்கள். மேற்படி 5 நபர்களில் 3 நபர்கள் காவல் துறை சரித்திர பதிவேட்டில் குற்றவாளிகளாக உள்ளவர்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:33:32 +0530

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர், வழக்கு பதிவு செய்தது காவல் நிலையத்தின் ஆய்வாளர் என்றால் சரி. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக தனி நபர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரி. தனி நபர்கள் யாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் ஆய்வாளருக்குதான் தெரியும். எனக்கு தகவல் கொடுத்தது என்னுடைய காவல் ஆய்வாளர் என்றால் சரி. திருவாரூர் மடப்புரம் குரு தெட்சிணாமூர்த்தி மடத்திலிருந்து விளமல் கல்லு பாலம் வரை சுடுகாடுகள் உள்ளன என்றால் சரி. காவல் ஆய்வாளர் எனக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை எனவும் எதிரிகள் யாரும் தீபாவளிக்கு முன்பு அங்கு நின்று பேசிக் கொண்டிருக்கவில்லை எனவும் என்னுடைய காவல் ஆய்வாளர் அறிவுரையின் பெயரில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு. எதிரிகளை என் முன்னிலையில் கைது செய்ததாக சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் தவறு. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு காலை 6.00 மணிக்கு சென்று விட்டேன். வழக்கு எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை. சாட்சிகள் வள்ளல் மற்றும் ரவிச்சந்திரன்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.10 16:33:37 +0530

எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் அளிப்பவர்கள் என்றால் சரி. காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எங்கள் ஆய்வாளரால் போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் சொல்வதுபோல் சொன்ன தேதி, இடத்தில் எதிரிகளை பார்க்கவில்லை எனவும் எதிரிகளை கைது செய்யவில்லை எனவும் எதிரிகளிடமிருந்து தடய பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:33:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.